1968 பிப்ரவரி 14]

எடுக்கப்படாமல் இருப்பதால் இன்னும் கூட்டுறவுச் சங்கங்களில் இதுபோன்ற கையாடல்கள் ஏற்படுவதற்கு வகையாக இருக்கிறது. ஆகவே, உடனடியாக நடவடிக்கை எடுத்து அதற்கு வேண்டியவைகளைச் செய்ய அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இந்த அரசாங்கம் பதவி யேற்றதற்குப் பிறகு இதுபற்றி ஆராயப்பட்டு, காலதாமதங்கள் ஏற்பட்ட காரணங்களைக் கண்டுபிடித்து, இதற்காக இப்படிப்பட்ட வழக்குகளை மட்டும் நடத்த போலீஸ் பிரிவில் தனிப்பிரிவும் ஏற்படுத்தப்பட்டு, கணக்குகளைத் தவறு என்று கண்டு பிடிக்கக் காலதாமதம் ஏற்பட்டால் அதையும் போக்க வேண்டுமென்று பரிசீலித்து அதற்காக கணக்கு ஆய்வு செய்யக்கூடிய குழுவையும் அதிகப்படியாக ஏற்பாடு செய்திருக்கிறது.

கதர் கிராமத் தொழில் போர்டு

*33 வின.—திரு. ஏ. எம். ராஜா : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா :

தமிழ்நாடு காங்கிரஸ் திட்டக் கமிட்டியின் காரியதரிசியே கதர் கிராமத் தொழில் போர்டின் மானியமும் கடனும் கொடுக்கும் நிதிக் குழுவில் அங்கத்தினராக கடந்த 5-ஆண்டுகளாக இருந்தது உண்மையா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : ஆம்.

திரு. ஏ. எம். ராஜா: தலைவரவர்களே, கதர்-கிராமத் தொழில் போர்டின் மானியமும் நிதியும் கொடுக்கும் நிதிக்குழுவில் உறுப்பினர்கள் யார், யார்? எந்த உறுப்பினர்கள் இந்தக் கதர்-கிராமத் தொழில் போர்டிலும், மானியம் கடன் தரும் இடங் களிலும் உறுப்பினர்களாக உள்ளார்கள்? அம்மாதிரி இரண்டு இடங்களிலும் தொடர்புடையவர்கள் யார் யார் என்பதைத் தெரிவிக்கும்படி கேட்டுக் கொள்ளுகிறேன்.

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : தலைவர் அவர்களே, இந்த கதர்-கிராமக் கைத் தொழில் ஆயத்தினுடைய உறுப்பினர்கள் 15-க்கு மேற்படாமல் இருக்க வேண்டுமென்று விதியிலே அமைக்கப் பட்டிருக்கிறது. இந்தக் கதர் நிர்மாணத் திட்டக் குழுவினுடைய உறுப்பினராகிய திரு. கே. பி. வி. கிரி அவர்கள் தொடர்ந்து இந்த நிதிக் குழுவிலே இடம் பெற்றிருக்கிறார் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

*34 வின.—திரு. ஏ. எம். ராஜா : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தமிழ்நாடு காங்கிரஸ் நிர்மாணத் திட்டக் கமிட்டியின் கணக்குகளை கதர்-கிராமத் தொழில் போர்டு கடந்த எட்டு ஆண்டுகளில் எத்தனை முறை தணிக்கை செய்தது?